வெள்ளிக்கிழமை தோறும் வெளி வருவது

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

உ
சிவமயம்

# இந்து சாதனம்
# HINDU ORGAN

சைவ பரிபாலன சபை வெளியீடு

பிரதி விலை சதம் 20

ஆரம்பம்: விரோதி ஹூ (1889) ஆவணிமீ 28-ம உ. அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 3:6

புத் - அக] யாழ்ப்பாணம்:- பிங்கள ஹூ ஆவணி மீ கா - உ வெள்ளிக்கிழமை (2 - 9 - 1977) [இல: உ0

## நாடு அமைதிபெற நல்லூரான் கருணை வேண்டும்

### கலியுகவரதனைக் கை தொழுது விரதம் காப்போம்

"இளைபட்டெழு சூரரும் கிரியும்
தொளைபட்டுருவத் தொடு வேலவனே"

கைவாய் கதிர்வேல் முருகன் கழல் தொழுதல்லால் மனனே நீ உய்ய முடியாது எனவே வணங்குவோம் நல்லூர் வடிவேலனை. வணங்கிய வண்ணம் கிற்போம். இதுகாறும் நாம் தொழுதது காணாது. பழுதிலா அளம படியப் பழக வேண்டும்.

நல்லூரானை கினைந்தால் எல்லோரும் உய்யலாம். கந்தனும் சற்றுக் கருணை புரிவான்.

"எந்தாயும் எனக்கருள்
தந்தை யும் நீ
சிந்தா குலமான
வைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே
லவனே உமையாள்
மைந்தா குமரா
மறைநா யகனே".

சித்தர்கள் பத்தர்கள் சிறந்த சீரமைந்த நல்லூரில் நாதன் பெரு விழாக் காலத்தில் மனம் வாக்குக் காயம் யாவும் புனிதமாகக் கந்தனை வந்தனை செய்வோம்.

வீண் பொழுது போக்காமற் காண்போம் நற் கருமம். துன்பம் அகலத் துதிப்போம். அன்புபெருக, அஞ்சலி செய்வோம்.

---

## சிவலிங்க வழிபாட்டின் சீலம்

(திரு. கு. வேலாயுதன், சட்டத்தரணி)

(முன் வளர்ச்சி -- 0)

இலிங்கம் :-

இலிங்கம் என்பது ஆன்மாக்களும் உலகங்களும் ஒடுங்குவதற்கும் தோன்றுவதற்குமான இடம் எனப் பொருள்படும். (லிங்கம் - லி - கம், லி என்பது ஒடுங்குதல், கும் என்பது தோன்றுதல்) இது சிவமும சக்தியுமான வடிவம, சிவலிங்க வழிபாடு வேதகாலத்துக்கு முன்பாகவும் இருந்தது. இராமாயண காலத்திலும இருந்ததற்குச் சான்று இராமபிரான் இராமேசுவரத்தில் தாபனம செய்த இராமேசுவர லிங்கமாகும். ஒவ்வொருவரும் தங்கள் கிராமங்களிலிருக்கும் திருக்கோயில்களில் சிவலிங்கபூசை. ஆராதனை, அபிடேகம், திருவிழா முதலியவற்றைப் பத்தியோடு செய்தும பக்தியோடு தரிசனம் செய்தும் சிந்தித்து வரச் சிவனருளால் துன்பம் கஷ்டம் வறுமை, நோய், கவலை நீங்கி நலமையடைவார்கள். சிவபூசை விளக்கம் பக்கம் 10. கடைசிப் பந்தி பக்கம் 11 முதல் பந்தி,

சிவலிங்கத்தில் காணப்படும் இலிங்கம ஞான சத்தியைக்குறிக்கும். சிவலிங்கத்தின் கீழ்க் காணப்படும் ஆவுடையார் கிரியா சக்தியைக் குறிக்கும், சிவலிங்கத்திலே எப்பொழுதுமோர் அசைவுண்டு அதுவே பராசக்தியாகும். ஆன்மாக்களின் பாசத்தைத் கெடுப்பதற்காக அசைதற் சக்தி இலிங்கத்தைச் சுற்றிக் கொண்டிருக்கிறது. அவ்வசைவு இலிங்கத்தில் உண்டென்பதை உணர்த்துவதற்கு ஆவுடையார் இலிங்கத்தைச் சுற்றிக் கீழடங்கி அமைந்திருக்கிறது ஆவுடையாரின் ஓர் பக்கத்திலே நீண்டிருப்பதாகிய கோமுகியானது ஆன்மாக்களைத் திருநோக்கம செய்கின்ற குறிப்பாகியமைந்திருக்கிறது.

சிவலிங்கம் மூன்று பாகங்களை யுடையதாயிருக்கும். 1) பிரமபாகம் (2) விஷ்ணு பாகம் 3) உருத்திரபாகம. உருத்திரபாகம் — ஆண்ரூபம. விஷ்ணு பாகம் — பெண்ரூபம். பிரமபாகம் — ஆண்பெண் இல்லாதரூபம்.

அவன், அவள், அது வாக இருக்கும் உலகத்திலேயுள்ள உயர்திணைப் பொருளும் அஃறிணைப் பொருளும் தமமடத்திலே தோன்றி ஒடுங்குகின்றன என்பதை இது உணர்த்துகிறது.

சிவலிங்கமே பிரணவ முதற்பொருள். அதன்

[வளர்ச்சி 2-ம் பக்கம்]

---

உ
திருச்சிற்றம்பலம்.

வானந் துளங்கிலென்
மண்கம்பமாகிலென்
மால்வரையும்
தானந் துளங்கித்
தலைதடு மாறிலென்
தண் கடலும்
மீனம்படிலென்
விரிசுடர் வீழிலென்
வேலை நஞ்சுண்
டுன மொன்றில்லா
ஒருவனுக் காட்பட்ட
உத்தமர்கட்கே.

திருச்சிற்றம்பலம்,

---

## ஆதீன ஆண்டு விழா

நல்லை. ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ பரமாசாரிய சுவாமிகள் ஞான பீடமேறிய பதினேராவது ஆண்டு நிறைவு விழா ஆதீனத்தில் வருகிற 4-9-77 ஞாயிற்றுக்கிழமை கார்த்திகைத் திருவிழாவன்று நிகழும். அன்று அதிகாலை முதல் விசேடபூசை ஆராதனை, . மங்கள வாத்திய பூசை, சொற்பொழிவு ஆதியாம் நிகழ்ச்சிகளுடன் சிறப்பாக நிகழும்.

---

சைவ பரிபாலன சபை—
யாழ்ப்பாணம்,

## பண்ணிசைப் போட்டி

யாழ் மாவட்டத்திலுள்ள பண்ணிசை பயிலும மன்றங்கள் மத்தியில் ஒரு பண்ணிசைப்போட்டியை இந்து சமயவிவகார ஆலோசனைச் சபையின் ஆதரவுடன் நடாத்த ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இப் போட்டி நான்கு பிரிவுகளாக நடாத்தப் பெறும்.

14 வயதுக்குட்பட்டவர் ஆரம்ப பிரிவிலும் 16 வயதுக்குட்பட்டவர் கீழ்ப பிரிவிலும் 21 வயதுக் குட்பட்டவர் மத்திய பிரிவிலும மேற் பிரிவில 21 வயதுக்கு மேற்பட்டோரும் தோற்றலாம.

விண்ணப்ப முடிவுதிகதி 16-9-77 16.10-77இல போட்டி நிகழும்.

பண்ணிசை வகுப்பை முறையாக நடாத்தி வரும மன்றங்கள மாத்திரமே போட்டியில் கலந்து கொள்ளலாம என பண்ணிசைப் போட்டிச் செயலாளர் தெரியத் தருகின்றார்:

---

## சடையம்மா மட தருமம்

இம்மட தரும பரிபாலன சபைத் தலைவர் திரு. சி. தம்பிஐயா சைவ பரிபாலன சபைக்கு விடுத்த விண்ணப்பம்

ஸ்ரீமதி சடையம்மா மட தர்ம பரிபாலன சபையினராகிய நாம் தங்கள் சபையினருக்கு மேற்படி மடம் கிலமடைந்து போன நிலைமையைக் கவனத்திற்குக் கொண்டுவந்து, பின்வரும் அதனது பணிகளையும் தாங்கள் சீர்தூக்கிப் பார்த்து, உரிய நடவடிக்கைகளை எடுக்க ஒத்துழைக்கும்படி கோருகின்றோம்,

மடம் :

இம் மடம் இற்றைக்கு 75 வருடங்களுக்கு முன்னர் ஸ்ரீமதி சடையம்மா அவர்களால் தாபிக்கப் பெற்றது. இம் மடம் 44 அறைகளும் பெரிய தகரக் கொட்டகையும் தேவையான உபகரணங்களும், சிறந்த சுகாதார வசதிகளையும் கொண்டதாகக் குறைவின்றி விளங்கி வந்தது.

பரிபாலனம் :

ஆரம்பத்தில் இம் மடம் சடையம்மா அவர்களாலும், அவரின் பின்னர் தம்பிரான் சுவாமிகளாலும் பின்பு குருநாத சுவாமி அவர்களாலும் பரிபாலிக்கப்பட்டு வந்தது. இவர்களின் பின்னர் குருநாதசுவாமி பரிபாலன சபையை ஆக்கி அச் சபையினரால் திறம்பட நிர்வகிக்கப்பட்டு வந்தது,

பணிகள் :

இம் மடத்தில் தினமும் அன்னதானம் நடைபெற்று வந்தது. விழாக் காலங்களில் பெருந்தொகையான அடியார்களுக்கு அன்னதானமும், தங்குமிட வசதிகளுமளித்துப் புராணபடனங்களும் நடாத்திப் பெரும் பணியாற்றி வந்ததும் இம் மடமே, மேலும் விழாக் காலத்தில் முற்பகல் பத்து மணிப் பூசைக்கு கதிர்காம சுவாமிக்கு நைவேத்தியமும் கொடுத்து வந்தது.

தற்போதைய நிலை :

இத்தகைய சிவப் பணிகளை ஆற்றி வந்த இம் மடம் முன்பிருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கத்தால் முற்றாக இடிக்கப்பட்டு அதற்குள் இருந்த பழனியாண்டவர் கோவில் மட்டும் இடிக்காமல் விடப்பட்டது சென்ற வருடம் அக்கோவிலையும் இடித்து விட்டார்கள். மடம் இடிபட்ட பின்பும் கோவில் வாசலில் விழாக் காலங்களில் மண்டகப்படி வைத்து வழிபாடு செய்து வந்தோம். இப்போது அதுவும் இயலாது போய்விட்டது.

இவ்வாறான கொடுமைகளுக்கிலக்காகி நிற்கும் இம் மடத்தையும் கோவிலையும் தற்போதுள்ள அரசாங்கமாவது கட்டித் தரும்படி தங்கள் சபை கோரி சைவ சமூகத்தின் சார்பில வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டுமெனத் தங்களைக் கோருகின்றோம்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந் துயர் தீர்கவே,
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

பிங்கள ஹூ ஆவணி மீ" கஎ-உ வெள்ளி

## வழுக்கி வீழினும் திருப்பெயர் மறவோம்

அட்டூழியத்தின் மேல் அட்டூழியம். அநியாயம் அளவுக்கப்பாற்பட்டுவிட்டது. ஆதரவற்றவர்களாய் அநாதைகளாய் அவதிப்படுவோர் அநேகத்திலும் அநேகம்,

திக்கெலாம் தீமை என்றால் சேமத்துக்கு இடம் எங்கே! சொந்த நாட்டில் சுயமாக வாழ்ந்த ஊர்களில் உள்ளவர்களுக்கா இந்த நிலைமை? தேசத்துக்கும் தேசத்துக்கும் யுத்தம் நடந்த காலத்திலும் பூவுலகம் முற்றிலுமே போர்க் கோலம் கொண்டிருந்த வேளைகளிலும் இவ்வித அசம்பாவிதங்கள் விபத்துக்கள் இருக்கவேயில்லை.

உயிர்ச் சேதங்கள்? எத்தனை எத்தனை? பொருட் கொள்ளை; வன் செயல்கள எத்தனை எத்தனை? அம்மம்ம! வேதனை யடைந்துள்ளோர்களுக்கு எவ் வகையில் ஆறுதல் கூற முடியும்?

யார் இதற்கு வகை சொல்ல வேண்டியவர்கள்? எங்கிருந்து இந்தப் பூலோக எமன்கள் தோன்றினார்கள். இவர்களுக்குத் தெய்வமில்லையா? சமயமில்லையா? கருணையில்லையா? மனச் சான்று இல்லையா? மனித மாமிசத்தை உண்ணும் வனவேடர் கூட இந்த விதமாக இரத்த வெறி கொள்ள மாட்டார்களே!

எரி மலை கொதித்தெழுந்தாற்போல இரகசிய மன ஆத்திரத்தைக் கொண்டு பதுங்கி இருந்த படுபாவிகள, கொலைஞர்கள், கொள்ளைக் கூட்டத்தினர் இராட்சத கணங்கள என்ன, ஒன்றுமறியா ஏழை மக்கள் மத்தியிற் புரிந்த இந்த மா பாதகத்தை யார்தான் மன்னிப்பர், இயற்கை சும்மா விடுமா? வினைப் பயன் விளையாது போமா?

பெருந்தியாகஞ் செய்த அருமை உடன் பிறந்தார்களை வருந்தி வாடி மயங்கும் மக்களே தெய்வம் ஒன்றுண்டென்னும் சிந்தை படைத்த நாம என் செய்யலாம். இறைவனை மறவாதிருப்போம். எள்ளளவும் ஈசன் எண்ணம் இல்லாதிருக்கமாட்டோம். சஞ்சலம் தீர்க்கும் மருந்து பஞ்ச ஆக்கரம்; துன்பம் அடைக்கும் துணை அந்தத் தோன்றாத் துணை. இவ்வாறு இயங்குதலே முடியும்.

எனவே புனித யோகம் செய்வோம். மனம் வாக்குக் காயத்தை மாசுபடாது வைத்து மாபெருங் கடவுளின் கருணையை வேண்டுவம்,

## துர்க்கை அம்பாள் தேர் விழா அடியார் துன்பம் துடைத்தது

### இயற்கையும் இசைந்தது; செயற்கைத் தணிக்கையும் தளர்ந்தது!

"அல்லல் என் செயும் அருவினை என் செயும்" என்ற மனத் துணிவுடன் அடியார்கள் பன்னூற்றுக் கணக்காகத் தினமும் துர்க்காதேவி ஆலயத்திற் பெருவிழாக் கண்டு அமைதியை வேண்டி அர்ச்சனை செய்தனர். மக்கள் அமர் தீர்க்க மாதேவி கருணை புரிந்தது போலத் தேர் உலாவும தீர்த்த விழாவும் வழமை போல சீராக அமைந்தன. ஆவணிச் சூரிய வெப்பமும் அப்பொழுதில்லாமல் வானம் தண்ணென்றிருந்தது. பத்தர்கள் வேறு எண்ணமோ வீண் பொழுதோ கொள்ளாமல் சித்தம ஒருமித்துத் தேவியையே சிந்தை செய்தனர். வேதியர் வேதம் ஓதியபடி வீற்றிருந்தனர்; ஓதுவார் திருமுறை ஓதிய வண்ணம் நின்றனர், மங்கல வாத்தியம் எங்கணும் ஒலித்தவாறு திகழ்ந்தது

அடியவருக்கு ஆதாரம் தரும் அமைப்பாக இவ் விழாக்கள் இருந்த சிறப்புத்தான் எனனே!

பரந்தெழுந்த சமண்முதலாம்
பரசமய இருணீங்கச்
சிரந்தழுவு சைவநெறித்
திருநீற்றின் ஒளிவிளங்க
அரந்தைகெடப் புகலியர்கோ
னமுதுசெய்யத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாமசுந்தரி
பூங்கழல் போற்றி,

## சைவ சித்தாந்த வகுப்பு

திருவருளை முன்னிட்டு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாதரவில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சனிக்கிழமை தோறும் முற்பகல் 9, 10-30 மணிவரை சிவஞான போதமாபாடிய வகுப்பொன்றை சைவப்பெரியார் சித்தாந்த வித்தகர் பண்டிதர் திரு, மு, கந்தையா B. A, அவர்கள் நடத்தி வைப்பார்கள்,

ஷ வகுப்பிற் சேர விரும்புகின்றவர்களை அன்புடன் அழைக்கின்றோம், குறித்த வகுப்பு 3-9-77 சனிக்கிழமை ஆரம்பமாகும்.

சைவ பரிபாலன சபை,
யாழ்ப்பாணம், 15-8-77.

மு: மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்.

## இராகு தோஷ நிவிர்த்திக்கு இறைஞ்சுதற்குரிய தலம்

உலக மாதாவாகிய உமா தேவியார் கைலயம்பதியில் ஓர் நாள் சிவபெருமானை வணங்கி. "மற்றோர் முறை தங்களை மணந்து இன்புற வேண்டும்" என வரங் கேட்க, சிவபெருமானும் கருணை கொண்டு 'வரும் பிரம கற்பத்தில் உன்னை மணம் புரிந்தருள்வேன்" என்றார்; உமா தேவியார் தன்னுடைய ஆவல் நிறைவேற வெகுகாலம் தள்ளி ஈஸ்வரன் நாள் குறிப்பதைக் கேட்டு வருத்தமுற்று, சிவபெருமானிடத்தில சற்று அலட்சியமாக நடக்க தலைப்பட்டார் சிவபெருமான் இதனைக் கண்டு சினங்கொண்டு, தமது வாக்கை அவமதித்துள்ள உமாதேவியாரைப் பூலோகத்தில் பசுவாக (கோ) வாழப்பணிந்து விட்டார்.

பசு உருக்கொண்ட உமா தேவி தன் செயலை நினைந்து வருந்தி, பெருமானிடம் சாப விமோசனம் கேட்டு மன்றாடவே, பெருமான் சினம்தணிந்து அருளியவாறு திருமகள், கலைமகள், இந்திராணி, மற்றும் தேவமாதர் பலரும் பசு (கோ) உருவெடுத்துக் கொண்டு உமா தேவி (பசு உருக்கொண்டுள்ளவர்) யுடன் பூலோகத்திற்கு வருகை புரிந்து பல ஸ்தலங்களில் உலாவிக் கொண்டு வந்தார்கள்.

பசு உருவான உமாதேவியார் பொழியப்பட்ட பாலால் தன்னுடைய திருமேனி குளிரப் பெற்றும், குளம்பின் பரிசத்தால் தழும்பும் பெற்று மகிழ்ச்சி அடைந்துள்ள சிவ பெருமான் உளமகனிந்து உமை அம்மை விரும்பியவாறு, திருமணம் புரிந்து கொள்ளவும் திருவுளங் கொண்டு, திருவாவடுதுறையில் கோ உருவமுடனுள்ள உமாதேவியாருக்கு முத்தி அளித்து, திருத்துருத்தி என்று கூறும் குத்தாலத்தில் பரதமகாஷி நடாத்திய வேள்வியிலிருந்து உமை அம்மை கோகிலாம்பாள் அம்மையாகத்தோன்றும்படி திருவருள் புரிந்து, திருமணஞ்சேரியில் சிவபெருமான் ஸ்ரீ கல்யாண சுந்தரேசுவராகத் தோன்றி, ஸ்ரீ கோகிலாம்பாள் (யாழினும் மென் மொழி அம்மை) கரத்தைப்பற்றிக் கொண்டு திருமணம செய்துக் கொண்டுள்ளார் என்று வரலாற்றில கூறப்பட்டிருக்கின்றது.

இவபெருமானின் திருமணம் இங்கு நடைபெற்றதால இவ்வூர் "திருமணஞ்சேரி" என்று வழங்கிவருகின்றது பிரதி ஆண்டும் சித்திரை மாதம் பூச நட்சத்திரத்தில் மூன்று நாளும் திருமண மகோற்சவம் அதிசிறப்பாக நடைபெற்றும் வருகின்றது. கோயில் செம்பியன்மா தேவியாரால் திருப்பணி செய்யப்பட்டதாகக் கல்வெட்டும் இருக்கின்றது. திருநாவுக்கரசர் - திருஞானசம்பந்தர் இருவர்களின் தேவாரப்பதிகங்களால் இத்தலம் பாடல் பெற்றுள்ளது,

மாயூரம் — கும்பகோணம் (தஞ்சை ஜில்லாவிலுள்ளது) வண்டி வழியில் குத்தாலம் பகுதியில் நாலு கல் தொலைவில் திருமணம்சேரி தலம் இருக்கின்றது (நடை பாதையிலே, வண்டி, மூலம் செல்லவேண்டும்)

கோயிலில் ஸ்ரீ கோகிலாம்பாள் அம்மையின இடதுகரத்தைப் பற்றி நிற்கின்ற திருக்கோலத்துடன் காட்சி அளித்துக்கொண்டு இராகு முதலான கொடிய தோஷங்களால் திருமணம் கைகூடாது தடை பட்டிருப்போர்கள், (திருமணம் ஆகாமலிருக்கின்ற மங்கையர் - வாலிபர்கள்) இவ்வாலயம வருகை புரிந்து வழிபாடுகள் செய்து கொண்டால் தோஷங்களும் நிவர்த்தியாகி விரைவில் திருமணத்தைச் செய்துகொள்ள அருள்புரியக்கூடிய அனுக்கிரகமூர்த்தியாக ஸ்ரீ கல்யாண சுந்தரேசுவரப் பெருமான் காட்சி அளித்துக் கொண்டும் வருகின்றார்,

மேலும் இராகுதோஷத்தால் பீடிக்கப்பட்டு புத்திர பாக்கியம இல்லாத தம்பதிகள் இத்தலத்திலுள்ள "சப்த சாகர் தீர்த்தத்தில நீராடி, இங்குள்ள ஆதிசேஷனுக்குப் பால அபிடேகமும், பாற்பொங்கல நிவேதனமும் செய்து சாப்பிட்டால் தங்களது ராகு தோஷம நீங்கப் பெற்று புத்திரப் பேறு பெறுவர் என்றும் தலவரலாறு கூறுகின்றது,

பலர் வருகை புரிந்து ராகு தோஷ நீங்கிப்பிரார்த்தனையை நிறைவு செய்துமவருகின்றனர்

பெருமானின் திருக்கல்யாண வைபவத்திற்காக சப்த சாகரங்களும் மாலையாக மாறி வந்ததாகவும், சப்தசாகர தீர்த்தங்களும் இத்திருக்கோயிலைச்சுற்றிலும அகழியாகக் காட்சி அளித்துக் கொண்டு இருக்கின்றது,

x x x

## மகாகயிலாய தரிசனக் காட்சி விழா

திருதருமை ஆதீனம் 26-வது குருமகாசந்நிதானம ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள அவர்கள சமயாசாரியர்களில் ஒருவரான ஸ்ரீ அப்பர் பெருமான் கயிலைக் காட்சியைக் கண்டு மகிழ்ந்த ஆடி அமாவாசைப புண்ணிய தினத்தன்று 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமணிகள அவர்களின் மகா கயிலாய தரிசனக் காட்சியின 18 ஆவது ஆண்டு நினைவுவிழா வையும், அப்பர் சுவாமிகள் திருவையாற்றில் கயிலைக் காட்சியை கண்டுள்ள நன்னாளையும் ஆடித் திங்கள் 30 ஆம் நாள் அமாவாசைத் தினத்தன்று சிறப்பாக நடாத்தி வைத்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள காலை - மாலை பூஜை மடத்தில திருக்கயிலாயத்திருவுருவப் படத்திற்கு பண்ணிசை வாணர்களின அகண்ட திருமுறைப் பாராயணங்களுடன பக்த கோடிகள சூழ வழிபாடுகள் செய்து கொண்டு எல்லோருக்கும் அருட் பிரசாதம வழங்கினார்கள்,

பகலில மாகேசுர பூசையுடன் ஆதீனக் கல்லூரி ஆசிரியர்களின் சமய விரிவுரைகளும இரவு திருமுறைவாணர்களின் இன்னிசையுடன வெள்ளி இரதத்தில திருவுருவப் படம் திருவீதியுலாவும் நடைபெற்றது.

(எமது சிதம்பரம் நிருபர் திரு, மா, பாலசுப்பிரமணியம்)

## சிவலிங்க வழிபாடு

1-ம் பக்கத்து வளர்ச்சி

சோதித்தன்மை அகார உகார மகாரமாயிருக்கும். 1) அகரம் — சிவமும (2) உகரம் — சக்தியும் (3) மகரம் — கலைவடிவம். இலிங்கம்- சிவரூபம், பீடம் - சத்திரூபம், இலிங்கம்- நாதரூபம், பீடம்- விந்து ரூபம.

விந்து சத்திபீடரூபமாக விளங்கிச் சுத்தமாயாகாரியமும், அசுத்தமாயாகாரியமும், பிரகிருதி காரியமுமாகிய அத்துவாக்களை வியாபித்து நிற்கும். (அத்துவாக்கள் எனறால (1) மந்திரம் (2) பதம (3) வன்னம் (4) புவனம் (5) தத்துவம் (6) கலை. ஞான சக்தி இலிங்கரூபமாய் நின்று விந்துசத்தியைக் காரியப்படுத்தும இயல்பே பீடலிங்க ரூபமாம,

சிவன் சத்திவடிவமெய் துதலால் உண்டாய பலன சிவஞான சித்தியாரிற் பின் வருமாறு கூறப்பட்டுள ளது. (வளரும்)

## சட்ட அறிஞர் காலமானார்

சட்டத்துறையில் முன்னணியில் நின்று கால நூற்றாண்டு காலம் அயராதுழைத்தவரும முன்னாள் அரச சட்டத்தரணியாகத் திறமையாகக் கடமையாற்றியவரும ஆகிய திரு. க. இ. கதிர்காமலிங்கம அவர்கள். நடு வயதிலே இவ்வுலக வாழ்க்கை நீத்தமை துயரத்துக்குரியது.

முன்னாள் சைவபரிபாலன சபைத் தலைவராய் இருந்த அரச சட்டத்தரணி திரு. த. முத்துச் சாமிப்பிள்ளையின மருகரான திரு. கதிர்காமலிங்கம. சட்ட அறிஞராகத் திகழ்ந்து ஏனைய சட்டத்தரணிகளுக்கெல்லாம் உற்ற நண்பனாய் விளங்கினார். சாந்தமானகுணம படைத்த இவர் சமய வாழ்க்கையில் உயர்ந்த படியில் நின்றனர். என்றும அநுட்டானம செய்து விபூதிதாரணம விளங்கும முகப் பொலிவுடையவர். ஆலய வழிபாட்டில் ஆர்வமுள்ளவராயிருந்த இவர் துர்க்காதேவி கோயிலில விசேட பற்றுடையவர். நவராத்திரி விஜய தசமி விழாவைக் கிரமமாகச் செய்து வந்தனர். ஆன்ம சாந்திக்குப் பிரார்த்தனை செய்வோம.

'இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்,

### அறிவித்தல்

தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களால சென்றவார இந்துசாதன இதழ் வெளிவரவில்லை. —அதிபர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## செல்வச் சந்நிதியிற் சேவற்கொடியோன் இரத அணி

### கையில் வேலால் எமைக் காக்க என்று பத்தர்கள் இறைஞ்சின காட்சி

தீர்த்த மகிமைக்குச் சிறந்த தொண்டைமாற்றுச் செல்வச் சந்நிதி ஆண்டுவிழாக்கள் அடியார்களின் இதயக் குழறலைத் தணிக்கு முகமாக நன்கு விளங்கின.

என்றுமில்லாதவாறு பக்தர்கள் இறை எண்ணமாக இள முருகனை இறைஞ்சியவண்ணம் வரம்வேண்டி நின்றனர்.

---

## இந்து சமயமும் வாழ்க்கையும்

[ திரு. ந. சோமசுந்தரம் இருபாலை ]

( முன் வளர்ச்சி — 9 )

அருளும், பொருளும் ஒன்றுக்கொன்று முரணுமாறும் அவ்வாறு முரண்பட்டவற்றை இணைத்து உயிர்களை ஈடேற்றும் வரப்பிரசாதமாக அமைந்த அன்பை நீர் விருத்தி செய்யாதிருப்பது ஏனோ? எல்லாவற்றிற்கும் பொறுப்பாய் மூல காரணமாய் உள்ள இறைவன் அவ்வுயர். இவ்வுயிர் என்று வேறுபாடு கருதாதும், அவர் இவர் என்ற ஏற்றத்தாழ்வு கற்பியாதும், மழையையும், இப்பூமியையும் காற்றையும்நெருப்பையும் இன்னோரன்ன பிறவற்றையும் அளித்திருக்க நீனிர் இது எமது அது என்று சொல்லிவரையறைகட்டி ஆட்சிப்படுத்துவது, கருணை அவரது அடிமைத்திறம் வாய்க்கப் பெற்ற அன்பர்க்கும் பொருக்குமா? அன்பால், அருளால் உயிர்களைக் கட்டி ஆளாது அகங்காரத்தால் அடக்குமுறையால் வன்முறையால் உயிர்களைக் கட்டியாள்வது இயல்பானதோ? அரசன் குடிகள் மேல் அன்புடையவன் ஆயின் அவனாட்சி மாட்சிமை பொருந்தியதன்றோ?

தினமும் அன்புக் குளத்தில் குளிக்க வல்லவர் உள்ளத் தூய்மைக்கு வேறு சாதனை செய்யவேண்டிய அவசியம் என்ன? அன்புவெள்ளத்தில் அளக்கும் பேறு பெற்றவர் எடையும் குளிர்ச்சியும் இன்பமும, வேறு யார் அடைய வல்லார்! புறவுலகச் சூரியன் அக்கினியேபோற்சுடினும், அகமார்ந்த அன்புக் குளத்தில் மூழ்கிக் கொண்டிருக்கும் அன்பர்க்கு வெம்மைசான்ற புறச்சூரியனும் தண்மைசார்ந்த நிலாவன்றோ! அன்புவெள்ளத்தில் அழுந்தியவரே சைவ சித்தாந்தத்திற் கூறப்பட்ட ஜாக்கிரமாகிய பொறிபுலன்களோடு கூடியிருக்கும் காலத்தில் அனுபவிக்கக் கூடிய அதீதநிலையில் நிற்பவர் ஆவர். ஜாக்கிராதீதம் கைவரப்பெற்றவர்க்கு மீண்டும் பிறக்கும் நெறியுண்டோ? இல்லை, இவ்வாறான தேகத்தின் கூடியிருக்கின்ற காலத்தில் அனுபவிக்கக்கூடிய அதிசிறந்த நிலையாகிய மோட்ச அனுபவத்தை அன்பின்வழி கசிந்துருகும் அடியவர் பெறுகின்றனரே. இதில் சந்தேகமும் உண்டோ? 'அன்பினில் விளைந்த ஆரமுதே'.

---

### கந்தபுராண விரிவுரை

நல்லூர்க் கந்தன் கோயில் திருவிழாவின் மாலை 4-00 மணி முதல் 6-00 மணி வரை தினந்தோறும் கந்தபுராண விரிவுரை நடைபெற்று வருகிறது. நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ பரமாசாரியசுவாமிகள் இவ்வுரையை நடாத்தி வருகின்றார்கள்.

---

## இலக்கிய காவியங்களில் யாம் காணும் கற்பரசிகள்

( ஆய்வாளன் )

( முன் வளர்ச்சி — 2 )

கம்பன் காவியத்தில் சோகச் சிலையாகக் காட்சி தரும் மண்டோதரிபோன்று வேறொரு கற்புக்கரசியை நாம் காண்டல் அரிது. பகைவரையும் பழிக்காத சாத்துவிக சீலியாக மண்டோதரி மிளிர்ந்தாள்.

தன் இளைய மைந்தன் அட்சயகுமாரன் அனுமானாற் கொலையுண்ட கொடுமையைக் கண்டதும் மூர்ச்சையுற்று வீழ்கிறாள். அது மட்டுமா? இந்திரசித்தன் இலக்குவனால் தலை சிதைவுண்டு கிடப்பதைக் கண்ட அந்த மங்கை புத்திர சோகம் என்னும் நஞ்சினை பொன்றினாற்போலத் தரை மீது விழுந்து புரண்டு கதறலானாள்.

மீண்டும் இறுதியாக இராவணன் மடிந்து கிடக்கும் காட்சியைக் காண்கிறாள் அந்தக் கற்புக்கரசி. அவள் உள்ளம் பதைக்கிறது கதறுகிறாள்; கண்ணீர் விடுகிறாள்.

"சிவபெருமானின் கயிலை வெற்பையே எடுத்து அசைத்த ஆற்றல்மிக்க உடம்பெல்லாம அம்புகள் எள்ளிருக்கும் இடம்கூட விடாமல் தைத்துள்ளனவே கொடுமை! இராகவனின் வாளி நின்னுடலினுள்ளே புகுந்து சீதை மேல் நீ கொண்ட காதல் எங்கே இருக்கிறது? எனத் தேடித் தடவியதோ? 'அந்தோ! மாதர்க்கரசி சீதையின் அழகும, கற்பும், என் கணவர் அவள் மேல் வைத்த காதலும் சூர்ப்பநகை இழந்த மூக்கும தந்தையின் ஆணையால மைந்தன் கானகம போந்தநிலையும், தேவர்கட்கு வாய்ப்பாக அமைந்துவிட்டனவே."

இவ்வாறெல்லாம் கதறி ஓய்ந்த அந்தக் காரிகை, தலையாய கற்பினள் ஆதலின் தன்னன்புக் கணவன்மீது வீழ்ந்து உயிர் துறக்கின்றாள்.

மண்டோதரி பதி பத்தி இறைபத்தி இரண்டிலும் சிறந்து விளங்கிய அபயாவிப் பெண்மணி,

"ஆர்கலிசூழ் தென் இலங்கை
அழகமர் வண்டோதரிக்குப்
பேரருள் இன்பம் அளித்த
பெருந்துறை மேயபிரான்"

இன்னும்,

"பெருந்துறை ஆதிஅந்நாள்
உந்து திரைக் கடலைக்
கடந்தன்றோங்கு
மதிலிலங்கை அதனிற்
பந்தணைமெல் விரலாட்
கருளும் பரிசறிவார்
எம்பிரானாவாரே"

எனவரும் திருவாசகச் செய்யுள்கள் இவளது தகைமையை விளக்குகின்றன.

சேக்கிழார்பெருமானால் "அன்புமிக்க பெருங்கற்பின் அணங்கு" என்னும் 'மனை அறத்தின் வேர்' எனவெல்லாம் போற்றப்பட்ட திருவெண்காட்டு நங்கை சிறுத்தொண்டரின் அரும்பெறல் வாழ்க்கைத் துணைவியாவர். சிவனடியார் வேடந்தாங்கி, "தண்டாததொரு வேட்கைப் பசியுடையார்போலக் கண்டாரைச் சிறுத்தொண்டர் மனை வினவிக் கடிதணைந்த" இறைவனுக்கு இவர் தம் கணவர் சொல்லுக்கிணங்கித் தம் ஊறிலாத தனிப்புதல்வன் தன்னை அரிந்தங்கு கறியமுது சமைத்தூட்டிப் பெரும் பேறுபெற்ற கற்புக்கரசியாவர்.

இறையருள் வழிநின்று பேணப்படுங் கற்புநெறியே சிறந்தது- முத்திக்கும் ஏதுவாகும். இறையருள் வழி நில்லாது பேணப்படும் கற்பு நிலையாதது, இறையருள்வழி நில்லாமல் வேதங்களில கூறப்பட்ட வைதிக கருமங்களை விடாது அனுட்டித்த தாருகாவன இருஷிகளின் தர்மபத்தினிகளுடைய கற்பு நிலைகுலைந்த வரலாறு இதற்குச் சான்றாகும்.

---

### இந்துசாதனம்

சந்தா விபரம்

| | |
|---|---|
| உள்ளூர் — ஆண்டு | 18/— |
| புறநாடு — ஆண்டு | 50/— |
| ( ஆகாய வழி ) | 75/— |

அதிபர்
450, கே. கே. எஸ் வீதி
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

வழ. இல. 11587.

1. தாமோதரம் அரியநாயகம்
2. பெண் தெய்வானைப்பிள்ளை, துன்னாலை வடக்கு

எதிராக — வழக்காளிகள்

1. மார்க்கண்டு சோமசுந்தரமூர்த்தி
2. கைம் பெண் சிவபாதம். துன்னாலை தெற்கு — எதிராளிகள்

பருத்தித்துறை மாவட்டக் கோட்டின் வழ. இல. 11587-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ் விபரிக்கப்படும் ஆதனம 1977-ஆம் ஆண்டு ஐப்பசி மாதம 27-ஆம் திகதி ( 27-10-77 ) வியாழக்கிழமை மூற்பகல 10.00 மணியளவில் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

மேற் சொல்லிய அட்டவணை

### ஆதன இடாப்பு

வட மாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டவேலி கோர்வல் பற்று.

1. துன்னாலை வீரசுந்தரமுதலி குறிச்சியிறை அத்தாய் இதற்கு உலாந்தா மேஸதர் க. கணபதிப்பிள்ளையால 1927-ம ஆண்டு வைகாசி மாதம 5ம் தேதி 4933 ஆம இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டு 1927-ம் ஆண்டு ஆடி மாதம 6-ம தேதி நொத்தாரிஸ் சி. தம்பிமுத்து முகதாவில 4485ம் இலக்கத்தில் முடிந்த பிரிவிட லுறுதியோடணைக்கப்பட்டிருக்கும படத்தின்படி நி. பர. 10 குளி 3. 7/32. இதில் குறித்த படத்தில 3-ம, 4-ம் துண்டுகளுக்கு ( நி. பர. 5. குளி 6, 14/32 ) நி. பர ஐந்து குளியாறுடன் முப்பத்திரெண்டில் பதினநானகு. எல்லை கிழக்கு தெருவும, பின்னாற் காணும 2ம ஆதனமும். வடக்கு கணபதி நாகனுக்கும் மறு பேருக்குமுடைய ஆதனம், மேற்கு நல்லையா பெண வள்ளியமமைக்கும மறு பேருக்கும் உடைய ஆதனம். தெற்கு கணபதி நாகனுக்குடையவாதனம். இது முழுவதும் முழுக காணிக் கிணற்றுப் பங்கும வழி வாய்க்காலுரித்தும். இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 6000/—

2. மேற் சொல்லிய 1-ம் காணியில் மேற் சொல்லிய 4932-ம் இலக்கப்படத்தில் 5-ம் துண்டுக்கு குளி (9) ஒன்பது எல்லை கிழக்கு தெரு. வடக்கும மேற்கும தெற்கும மேற் சொல்லிய முதலாம ஆதனம். இதற் சொரியலாய் அரைவாசியும முழுக் காணிக் கிணற்றுப பங்கும வழிவாய்க்காலுரித்தும். இதற்குக் கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 250/—

3. துன்னாலை தெற்கில்உள்ள "சூடுவெந்ததா" என்றழைக்கப் படுவதும் 1903-ம ஆண்டு ஐப்பசி மாதம 13ம் தேதியைக் கொண்ட 2084l6 இலக்க ரயற்றில் பிளானில் சொல்லியதுமான காணி அதன் விசாலம் ஏக்கா 4 றூட 2 இதுவும இதற்குத் தெற்குப் புறமாக உள்ள சூடுவெந்தா என்று அழைக்கப்படுகிறதும் 1924 ஆவணி 2ம தேதியைக் கொண்டதும 362347 ம இலக்க ரயிற்ரில் பிளானில சொல்லியதுமான காணி இதன் விசாலம் பேட்சு 13, இதுவும் சேர்ந்த காணியின் விசாலம் ( 4 ஏ, 2 றூ 13 பே. ) ஏக்கர் 4. றூட் இரண்டு. பேட்சு பதின்மூன்று பனைகள், வடலிகள் தென்னைகள், வேம்புகள் கிணறும எல்லை கிழக்கு சங்கரன வல்லிபுரத்திற்கும் மறுபேருக்குமுடைய வாதனம, வடக்கும தெற்கும் முடிக்குரியவாதனம. மேற்கு ரோட்டுக்கருகாக விடப்பட்ட நிலம். இவ் எல்லைக்குட்பட்டவைகள் முழுவதும. இதற்குக் கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 4000/—

| | ரூபா | சதம் |
|---|---|---|
| தீர்வைத் தொகை | 10429 | 00 |
| 28-10-71 — 10-5-72 வரை ரூபா 6,000 க்கு 8 வீத வட்டி | 260 | 00 |
| 10-5-72 — 75, ஐப்பசி வரைக்கும் ரூபா 16650 க்கு 5 வீத வட்டி | 2919 | 00 |
| கோட்டுச் செலவு | 318 | 40 |
| | 13926 | 40 |
| கொடுபட்டது | 175 | 00 |
| மொத்தம் | 13751 | 40 |
| 13 19-75 ல் கட்டப்பட்டது | 4,000 | 00 |
| 12-10-76 ல் கட்டப்பட்டது | 4,000 | 00 |
| கழித்து மிகுதி கட்ட வேண்டியது | 5751 | 40 |

கா. முத்துக்குமாரு ஐயர்
நீதிமன்ற ஆணையாளரும,
கொமிஷன் விலைமதிப்பாளரும்

தங்கவேல் ஆலயம்,
சந்நிதி வேல்,
பருத்தித்துறை, 23-8-77

45. 2—9—77

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: எம். பி. 14080

பொன்னையா குமாரசாமி
கோண்டாவில்
வழக்காளி

எதிராக

1. தம்பையா விரசிங்கமும் பெண்
2. மகேஸ்வரியும் தனப்புளியடி சண்டிலிப்பாய்
எதிராளி

மல்லாகம் டிஸ்றிக் கோட்டில் இல. எம். பி. 14080 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1977ம் ஹூ புரட்டாதி மீ 9ம் ... வெள்ளிக்கிழமை முற்பகல் 10-45 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 3030/-ம் 30-9-73 தொடக்கம் 28-2-75 வரைக்கும் ரூபா 2000/- க்கு 12 வீத வட்டியும் அதன்பின முழுத் தொகைக்கும் இறுபடும வரை 5 வீத வட்டியும கோட்டுச் செலவு ரூபாய் 265/35 சதம்,

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக வலிகாமம தெற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சண்டிலிப்பாய இறை "வடலித்தோட்டம்" பரப்பு நில இலாச்சம் ஒன்பதரை ( பர, நில இலா 9½ ) கிணறும், கல்வீடும், செய்பயர் வான் பயிர்களும். எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு இராசையா கதிரவேலுவினுதனம. மேற்கு வல்லிபுரம தம்பையாவினதும பங்காளரினதும் ஆதனம. தெற்கு பொன்னம்பலம் கதிரேசுவினுதனம். இடங்கலும சொரியலாய் எட்டில் ஒரு பங்கும ( 1/8, அதற்குச் சேர்ந்தவைகளும்.

சோ. நரசிங்கம் J. P.
நீதிமன்ற விற்பனையாணையாளரும் மதிப்பாளரும்

தொல்புரம்
28-6-77

46. 2-9-77

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THOUGHTS TO BE TREASURED

கொன்றிலாரைக் கொலச்சொலிக் கூறினர்
தின்றிலாரைத் தினச்சொலித் தெண்டித்தார்
பன்றியாய்ப் படியிற்பிறந் தேழ்நரகு
ஒன்றுவார், அரன் ஆணை இதுண்மையே.

Those who incite others not ordinarily inclined to do so to commit the crime of killing and those who compel non-meat-eaters to eat meat, they will be born as swine in their next birth, they will fall into the seven kinds of hell and suffer, this is the Ordinance of God.

Hindu Organ

Friday, 2nd September, 1977.

# BRAZENLY BARBAROUS!

Never before in the history of internal disputes had occurred such brutish behaviour as has been in evidence during the past week all over the Island. Whispering tongues seem to have been busy from the day of the General Election in fabricating rumours involving racial animosity with the avowed object of throwing the country into confusion. The reports that were engineered by interested persons were more pernicious than wild statements of doubtful accuracy, They were poisonous from the very root calculated to infuriate the people. Incitement has been the aim.

Unfortunately those who first received the false reports happened to be the riff-raff who were only too ready to start the skirmish. The fire of fiendish incitement was thereafter fanned by the wind of desolation blowing from the hearts of disheartened political leaders. But in civilized countries such disastrous outbreaks would normally be suppressed by the skilful handling of the situation by the Police. Here in our Island it appears that those responsible for maintaining law and order have been immobilised by their personal sentiments. Were they there as partisans enjoying the effects of incendiarism — or could they have been participants. These questions will have to be answered at any rate when the Commission of Inquiry into the savage disturbances of this month begins investigation.

Butchery of the innocent is something that can happen only in the underworld — the lowest social stratum. How can the tragic killings of a large number of unsuspecting citizens be accounted for? Why should peace-loving persons be robbed of all their belongings and bodily harmed.

Is this the initial step to introduce insurgency? Are the people to lose all the progress they have been making during the past merely because there is masquerading a menacing group of descredited politicians in the guise of racial fanatics?

# A HUMBLE PRAYER

The appeal of our religious dignitaries issued to the Nation for goodwill, peace and harmony, is a solemn and weighty contribution towards the welfare of the country, if I might be permitted to say so with the utmost deference. It is further heartening to read the Appeal of the Mahatma Gaudhi Trust under the leadership of Mr. A. Ratnayake former President of the Senate and one of Sri Lanka's elder statesmen on similar lines, as well as those of the All-Ceylon Union of Teachers and other Organizations.

It is fervently prayed that the message would be productive of good results with the Grace of Providence. The silent prayers of millions of individual citizens of the country are directed towards this consummation.

S SIVASUBRAMANIAM,
Honorary Secretary
Council for National
Unity and Welfare

# AHIMSA OR LOVE

Ahimsa is not the crude thing it has been made to appear Not to hurt any living thing is no doubt a part of Ahimsa. But it is its least expression. The principle of Ahimsa is hurt by every evil thought, by undue haste, by lying, by hatred, by wishing ill to anybody. It is also violated by one's holding on to what the world needs. But the world needs even what we eat day by day. In the place where we stand there are millions of micro-organisms to whom the place belongs, and who are hurt by our presence there. What should we do then? Should we commit suicide? Even that is no solution, if we believe, as we do, that so long as the spirit is attached to the flesh, on every destruction of the body it weaves for itself another. The body will cease to be only when we give up all attachment to it. This freedom from all attachment is the realization of God as Truth. Such realisation cannot be attained in a hurry. The body does not belong to us. While it lasts, we must use it as a trust handed over to our charge. Treating in this way the things of the flesh, we may one day expect to become free from the burden of the body. Relating the limitations of the flesh, we must day by day strive to wards the ideal with what strength we have in us

It is perhaps clear from the forgoing, that without Ahimsa it is not possible to seek and find Truth. Ahimsa and Truth are so intertwined that it is practically impossible to disentangle and separate them, They are the like the two sides of a coin, or rather of a smooth, unstamped metallic disc. Who can say, which is the obverse and which is the reverse? Nevertheless Ahimsa is the means; Truth is the end. Means to be means must always be within our reach, and so Ahimsa is our supreme duty. If we take care of the means, we are found to reach the end sooner or later. When once we have grasped this point, final victory is beyond question Whatever difficulties we encounter, whatever apparent reverses we sustain, we may not give up the quest for Truth which alone is being God Himself.

—*Gandhiji in Yervada Mandir*,

# THE SUPREME DEITY AND ITS SPIRITUAL POWER

(Here is a very elucidating study by Sir P Ramanathan on our Religion. This formed the notes appended to the "Ramayana briefly told in English" by Lady Ramanathan)

(continued from 12-8-77)

Abroad, it puts on the appearance of goodness without believing in its virtue, is false in friendship, given to belittling others, boastful of its own deeds, unforgiving, scornful, much inclined to the pleasures of the senses, easily urged by external influences, and led away by diverse spirits owing to instability of character. Such a spirit, said St Paul, may be ever learning, but will never know the truth, which is God.

It is declared in our Jnana Shasthras, which expound the principles of eternal life (Sanathana Tharma) that Parameshvara organised this great and merciful scheme of graduated Chathur-varnis to reward meritorious men according to their respective deeds and raise them by degrees to the highest phases of righteousness and purity, and to actual knowledge of God.

Those who have learnt the bitter results of lawlessness and sensuous gratification, and the hollowness of atheism and agnosticism, and have begun to repent and to crave for light, are given the boon of Suthra-varna, so that religious and moral life may be learnt "line upon line and precept upon precept" and successfully practised. When the allotted time on earth expires, he is invested with the characteristics of Vaishya-thvam, and when this period passes, he is granted Kshathriya-thvam, and later on Brahmana thvam

Chelika (சேலிகை: A kind of musical instrument, 121.

Chera (சேர தேசம்): The country ruled by the Chera dynasty. Its capital was Karur or Vanji on the River Porunai. Near where it discharged itself into the sea was the principal port of the kingdom, named Musiri, now Karanganur, about 18 miles north of Cochin. To the South was the great temple city Thiru-anantha-puram, now called Trivandrum.

Owing to many wars which were waged between the Chera King and the Chola and Pandiya Kings, the boundaries of these kingdom varied at different periods. The Western boundary of the Chera kingdom was the Indian Ocean and its Eastern boundaries were parts of the Pandiya kingdom and the Chola kingdom, and its Northern boundary was Erumai-Nadu (Mahishathesa, now called Mysore.)

Chithrakuta சித்திரகூடம்; 'Lovely peak.' It was the seat of Valmiki's hermitage, where Rama, Sitha, and Lakshmana stayed for some time before entering Thandaka forest. It is the modern Chitrakote along the river Pisuni, lying about 50 miles South-east of Banda in Bundelkhand and South-west of Shringaverapura.

Chola-Thesa (சோழ தேசம்); The Northern part of Thamilakam ruled by the Chola dynasty. It was bounded on the East by the Indian ocean, on the South and West by the river, Kaveri, and on the North by the river, Palar Between the river Kaviri and the river Kumari (destroyed many centuries ago) by the Pandya kingdom. West of the Pandya and the Chola kingdoms was the Chera kingdom.

Cholathesam or Chola-nadu was also called Cholamandalam, corrupted into Coromandal.

Its capital was Uraiyur (உறையூர்) near Trichinopoly. Its chief sea-port was Kaviripumpattanam or Puhar.

The names Chera, Chola and Pandya, were primarily the names of families to which those kings belonged and came to signify the countries only later, 103.

Chudamani (சூடாமணி): A jewel worn on the head, presented to Sitha by her father, Janaka, 129,

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road, Vannarponnai, Jaffna on Friday, September 2, 1977.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org